# ஆக்கியோன்.

பூருவகாலத்திலிருந்த எந்த மனுஷனாவது மோசேயடைந்த சிரேஷ்ட நிலைமையை அடையவில்லை. மோசே தேவனுடன் சுயேஷ்டமாய்ச் சம்பாஷித்ததுபோல வேறெந்தமனுஷனாவது அவருடன் சம்பாஷித்ததில்லை. அவன் சகல மனுஷரிலும் அதிக சாந்தமுள்ளவனென்றும் சொல்லப்படுகிறான். ஆனால் அவன் எந்த மனுஷனாவது சகித்த அளவிலும் பார்க்க இஸ்ரவேல் சனங்களாலுண்டானவைகளை அதிகமாய்ச் சகிக்கவேண்டியிருந்ததினால் இதற்கு அதிக சகிப்பு என்பது பொருள். மோசே தான் தானே மேற்கூறிய இரு குறிப்புகளையும் எழுதினாலும், அது தற்புகழ்ச்சி என்னும் குற்றத்துக்கிடமாகாது. யோவான் தன்னை இயேசுவுக்கன்பான சீஷனென்று எழுதியிருப்பது போல, மோசேயும் தன்னைக்குறிக்கும் இவைகளை இதிகாசத்திலோர் பங்காக எழுதுவது அவசியமாயிருந்தது.

சிலர், மோசேதான் பஞ்சாகமங்களுக்கு ஆக்கியோனாயிருந்தால், அவன் "நான்" என்று தன்மையிடத்திற் பேசுவானேயன்றி, "அவன்" என்றுபடர்க்கையிடத்திற்பேசமாட்டானென்று ஆட்சேபிக்கின்றனர். ஆனால் இதிகாசங்களை எழுதுகிற எவர்களாவது அப்படித் தங்களைத் தன்மையிடத்தில் வைத்துப் பேசுகிறதேயில்லை. அப்படிப் பேசுதல் சரியாயிருக்கமாட்டாது. சுவிசேஷ ஆக்கியோர்களாகிய, மத்தேயு, யோவான் முதலியோரும் "நான்" என்று எழுதவில்லை. பஞ்சாகமங்களின் கடைசியில் எழுதப்பட்டிருக்கிற மோசேயின் மரணசம்பவம் அவனை அந்நூலாக்கியோனல்லனென்று திருஷ்டாந்தப்படுத்தமாட்டாது. அது பின்னொருவனால், ஒர்போது யோசுவாவினால் எழுதப்பட்டதென்பது தெளிவு. உபாகமத்தின் கடைசியிலுள்ள இரண்டு மூன்று அதிகாரங்களையும், மோசேயையும் யோசுவாவையுங் கூடி எழுதும்படி சொல்லப்பட்டிருக்கிறதை நாம் காண்கிறோம். (உபா. 31: 19.) மோசேயைப்போல் ஒரு தீர்க்கதரிசியும் தோன்றினதில்லை என்னும் வசனம், மோசேயின் மரணத்தைப்பற்றி எழுதினவனாலே எழுதப்பட்டதேயன்றி அம்மோசேயினால் எழுதப்பட்டதன்று.

மோசே சனங்களுக்குக் கொடுத்தபிரமாணங்கள் அவனுடைய சுய பிரமாணங்களல்ல. அவைகள் மோசேயி

ன் மூலமாய்ச் சனங்களுக்குத் தேவன் கொடுத்த பிரமாணங்களையாம். அவர் அன்பின் தேவனாயும் அவர் செய்கிற யாவும் அன்புக்கிசைந்தவைகளாயுமிருக்கின்றன.

திரளான சனங்களைக் கொல்லும்படி மோசே கட்டளையிட்டானென்றும், விசேஷமாக மீதியானியரை அழித்து, அவர்களுக்குள் 32,000 கன்னியர்களைக் கற்பழித்தானென்றும், அவனிற் பெருங் குற்றஞ் சுமத்துகிறார்கள். (எண். 31.) ஆனால் இவ் விஷயத்தை ஆராய்வாய்ப் பார்ப்போமானால், சொல்லப்பட்ட யாவற்றுக்கும் நல்ல நியாயங்களுள என்று காண்போம். மீதியானியர் அதிக அக்கிரமக்காரராயிருந்தார்கள். அவர்கள் மோவாபியருடன் கூடி இஸ்ரவேலரை அழிப்பதற்குப் பந்தக்கட்டுப் பண்ணினார்கள். அவர்கள் இஸ்ரவேலருடன் போர் புரிந்து யுத்தகளத்தில் அவர்களைக் கொல்ல வலாதவர்களானதினால், விக்கிரகாராதனையினாலும் வேசித்தனத்தினாலும் அவர்களை அழிவுக்குட் கொண்டுவரப் பிரயாசப்பட்டார்கள். (வெளி. 2: 14.) அவர்கள் எடுத்த கருமத்தில் முன்பின் சித்தியெய்தினர். இஸ்ரவேலர் இவ்விஷயத்தில் வழிதப்பிப் போனபடியினாலே, கொள்ளைநோயினால் 24,000 பேர் கொல்லப்பட்டார்கள். (எண். 25 அதி.) இம் முழுச்சம்பவமும், விபசாரம் விக்கிரகாராதனையுடன் எவ்வளவு சம்பந்தமுள்ளதாயிருக்கின்றதென்று காட்டுகின்றது. விக்கிரகாராதனையுடன் விபசாரம் எப்போதும் கூடியிருக்கிறதென்பதை, எத்தேசங்களிலும் எக்காலத்திலுமிருந்த சகலருடைய அநுபவசாட்சியும் காண்பிக்கின்றது. அவையிரண்டும் மனுஷரின் சரீரம் ஆன்மாவாகிய இரண்டையும் அழித்து நாசமாக்குகின்றன. ஒரு ஆளின் காலிலே புழுத்த தசைவைப்பு இருக்கும்போது, பட்சமுள்ள ஓர் வைத்தியன் அந்த ஆளின் சீவரட்சைக்காக அத்துன்மாமிசவைப்பை வெட்டி அகற்றிவிடுகிறான். இவ்வண்ணமே தேவனும் மீந்திருப்பவர்களை இரட்சிப்பதற்காகக் கெட்டுப்போனவர்களை நிர்மூலமாய் அழித்தார். அவர் கொள்ளைநோயினால் அவர்களை நிர்மூலமாக்கக் கூடியவராயிருந்தார். ஆனால் அவர்களை அழிப்பதற்குத் தேவன் இஸ்ரவேலரைக் கருவிகளாக நியமித்து அவர்களுக்குப் பாபத்தின் கோரத்தை உணர்த்துவது அவசியமாயிருந்தது. அவர் ஆண் குழந்தைகளைக் கொல்லாமல் விட்டி

ருந்தால் அக் குழந்தைகள் வளரும்போது இஸ்ரவேலரி
டத்திற் பழிவாங்குவார்கள். அவர்கள் ஸ்திரிகளுக்குள்
ளே தீட்டுள்ளவர்களை மாத்திரம் கொன்றார்களேயன்றி
உயிரோடு தப்பவைத்த 32,000 பெண்களையும் கற்பழிக்க
ல்லை. அவர்களில் அதிகமானவர்கள் குழந்தைகளாயிரு
ந்தார்கள். (எண். 31: 18.) அந்தச் சாதியாருக்குட் பெ
ண்பிள்ளைகள் இளம்பராயத்தில் விவாகஞ்செய்வது வழ
க்கம். இச்சிறு பெண்பிள்ளைகள் வளர்ந்து விவாகஞ்செ
ய்து இஸ்ரவேலராய் வருவதற்காக உயிரோடு காக்கப்ப
ட்டது பெரிய இரக்கமேயாம். போர்ச்சேவகர் தங்கள்
பிரியப்படி அப் பிள்ளைகளை நடத்துவதற்கு அவர்களுக்கு
இடங்கொடுக்கப்படவில்லை. ஒரு போர்ச்சேவகன், தப்ப
விடப்பட்ட இப் பெண்பிள்ளைகளிற் றனக்குப் பிரியமான
ஒருத்தியைக் கண்டு விரும்பினால், அவள் ஒரு மாசமாகத்
துக்கங்கொண்டாடிச் செய்யவேண்டியதானவிதசடங்கா
சாரங்களையுஞ் செய்து முடித்தப் பின் ஒழுங்காகவிவா
கஞ் செய்து கொள்ளலாம். (உபா. 21: 11-13.) ஆதி. 46ம்
அதி.ற் சனங்களுக்குட் பெண்பிள்ளைகளிலும்பார்க்க ஆண்
பிள்ளைகள் அநேகரிருந்தார்களென்று காண்கிறோம். ஆகை
யினால்இந்த ஒழுங்குஅவர்களுக்குஓர் தக்கசகாயமாயிற்று.

இன்னும் ஒரு மனுஷன் தன்மடியிலுள்ள மனைவியாயி
னும், சீவனிலும் அருமையான தன் பிராண சினேகிதனாயி
னும், மத விஷயத்தில் வித்தியாசமான கொள்கைகொ
ண்டிருப்பதைஅறிந்தானானால், அவன் அவர்களை மரணத்
துக்கொப்புக் கொடுக்கவேண்டும் என்று கட்டளையிட்டதி
னாலும் மோசே ஓர் குரூரனென்று சிலர் சாதிக்கிறார்கள்.
ஆனால் இது குரூரமல்ல என்பதற்கு இரண்டு நியாயங்க
ளுள. 1 வது. அவர்கள் தேவனைத் தங்களுக்கு இராசா
வாய் ஏற்றுக்கொண்டு அவருக்குக் கீழ்ப்படிந்திருப்போ
மென்று வாக்குத்தத்தம்பண்ணியிருந்தார்கள். இதினால்
விக்கிரகாராதனை இராசதுரோகமாயிருந்தது. ஒரு இராச
துரோகியை மறைத்துவைக்கிற எவனும் இராசதுரோ
கம் என்னுங் குற்றத்துக்குள்ளாகிறான். இராசதுரோகி
மரணாக்கினையடையவேண்டும் என்பதை எல்லாரும் ஒத்
துக்கொள்ளுகிறார்கள். 2 வது. விக்கிரகாராதனை மரண
த்திலுங் கேடாயிருக்கிறது. ஆகையால் இந்தத் தொற்று
நோய் சனங்களுக்குள்ளே பரம்பாதபடி தடுப்பதற்குத்

சாத்திரமான பிரமாணங்கள் அவசரமாயிருந்தன. மேலும் இப்படிக் குறிக்கப்பட்டது கொள்கையைப்பற்றிய வித்தியாசமல்ல. அவன்: "மனைவி விக்கிரகத்தை வணங்கினால்" என்று சொல்லாமல் "நீ விக்கிரகத்தை வணங்குகிறதற்கு அவள் உன்னை ஏவிவிட்டால்" என்றே சொல்லியிருக்கிறான். (உபா. 13: 6,7.) தீமையைப் பரப்புகிறதாயிருந்த இது தடுக்கப்படவேண்டியிருந்தது.

விக்கிரகாராதனை அறியாமையுள்ள எச்சாதிகளுக்கும் கேடாயிருக்கும். ஆயின் இஸ்ரவேலருக்கோ கேட்டின் மேற் கேடாயிற்று. அவர்கள் மெய்த்தேவனைப்பற்றியும் அவருக்குரிய ஆராதனைகள் எவை என்பதைப்பற்றியும் நன்றாய் அறிந்திருந்தார்கள்.

சுத்திகரிப்புக்குக் கடாரியின் சாம்பலை வழங்கவேண்டுமென்று மோசே சொல்லியிருக்க, சைவர் மாட்டுச்சாணியினாலாய திருநீற்றைப் பூசுவது ஏன் தவறென்று சிலர் வினவுகிறார்கள். இவ்விரண்டும் ஒன்றாயிருந்தாலும் அது சரியல்ல. மோசே குறித்த இச் சகல சடங்குகளும் கிறிஸ்துவுக்கும் அவரால்வரும் ஆசீர்வாதங்களுக்கும் முன்னடையாளங்களாயிருந்தன. கிறிஸ்து வந்தபின்பு இவைகள் பிரயோசனமற்றவைகளாயிருந்தன. இன்னும் கடாரியின் சாம்பலைத் தொட்டவனும் அது தெளிக்கப்பட்டவனும் சாயந்தரத்தில் ஸ்நானம்பண்ணுமட்டும் அசுசியாயிருந்தானென்று சொல்லப்பட்டிருப்பதையும் நாம் கவனிக்கவேண்டும். (எண். 19: 21.) ஆகையினால் இவ்விரண்டின் கருத்துகளும் ஒன்றாயிருந்தாலும், சைவர்கள் நாடோறும் அசுசியானவர்களாயிருப்பார்கள். இரண்டின் கருத்துகளும் வேறாயிருந்தாலும் அசுத்தம்தான். இந்துக்கள் பூர்வகாலத்திலே கருத்தறியாமல் அநேக பலிகளைச் செலுத்தினார்கள். பஞ்சாகமங்கள் பலிகளின்மெய்ப்பொருளை நமக்கு வெளிப்படுத்துகின்றன. மனுஷ சீவன் மிருக சீவனுடன் ஒப்பிடப்படக்கூடாத மேலானதென்றும் அது காண்பிக்கின்றது. மார்க்கமானது சடங்காசாரங்களையுடையதாயிருந்தாலும் அது அவைகளிலே அடங்கியிருக்கவில்லை. ஆனாற் தேவனின் அன்புகூர்ந்து பாவத்துக்காக அவர் செய்த பிராயச்சித்தத்தை நம்புவது எல்லாவற்றிலும் முக்கியமான காரியம்.

Published by the Jaffna Religious Tract Society